# 5. உதயணகுமாரகாவியம் உணர்த்தும் வாழ்வியல் நிகழ்வுகள்

- முனைவர் இரா.விஷ்ணுப்பிரிய

தமிழில் காப்பிய இலக்கியம் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு வளர்ச்சி நிலையினை அடைந்தது. ஒரு கதையை நீண்ட செய்யுள் வடிவில் கூறுவதைக் காப்பியமாகக் கருதுவர். தண்டியலங்காரத்தில்தான் முதன் முதலாகக் காப்பியத்திற்கான இலக்கணத்தைக் காணமுடிகின்றது. அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் பயின்று வருவது பெருங்காப்பியம் என்றும், இவற்றில் ஏதேனும் ஒன்று குறையினும் அதனைச் சிறுகாப்பியம் என்றும் பகுத்துக் கூறுவர். ஐம்பெருங்காப்பியங்களாக, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி இடம்பெறுகின்றமை போல ஐஞ்சிறுகாப்பியங்களாக உதயணகுமார காவியம், நாககுமார காவியம், யசோதர காவியம், சூளாமணி, நீலகேசி ஆகியவை இடம் பெறுகின்றன. இவ் ஐஞ்சிறு காப்பியம் என்ற தொடரை முதன் முதலில் மயிலைநாதர் பயன்படுத்துகின்றார். பிற்காலத்தில் சி.வை. தாமோதரம் பிள்ளை இத்தொடரைத் தொடர்ந்து கையாள்கின்றார். இவ் ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றான உதயணகுமார காவியம், கொங்குவேளிர் அருளிச்செய்த 'பெருங்கதை' என்னும் பெருங்காப்பியத்தின் வழி நூலேயாகும். இப்பெருங்கதையின் முதல், இடை, கடைப்பகுதியில் உள்ள கதை நிகழ்ச்சிப் பாடல்கள் சில கிடைக்கவில்லை. அவ்விடுபட்ட கதை நிகழ்ச்சியை நிறைவு செய்கின்றது இக்காப்பியம். இக்காப்பியத்தில் அமைந்துள்ள உதயணனின் வாழ்க்கை நிகழ்வுகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

## அமைப்பு

இந்த நூல் மொத்தம் 367 விருத்தங்களை உடையது. ஆறு காண்டங்களைக் கொண்டுள்ளது. அவை, 1. உஞ்சைக் காண்டம் 2. இலாவாணகாண்டம் 3. மகத காண்டம் 4. வத்தவ காண்டம் 5. நரவாகண காண்டம் 6. துறவுக் காண்டம் ஆகியனவாகும். நேமிநாதரின் திருவடிகளை முதலில் வணங்கிவிட்டு அதற்கு அடுத்தபடியாக சரஸ்வதியின் திருவடிகளையும், சாதுக்களின் திருவடிகளையும் வணங்குவதாக முதல் பாடல் அமைகின்றது. இரண்டாவது பாடல் அருகக் கடவுளை வழிபடுவதாக அமைந்து நின்று கடவுள் வாழ்த்து

நிறைவடைகின்றது. நூலின் உள்ளடக்கப் பொருளைக் கூறுவது அவையடக்கப்பகுதி. தீவினைப் பயனிலிருந்து விடுபடல் குறித்து அமைவது நூற்பயன் இப்படியாக நூலின் முகப்பில் நான்கு பாடல்கள் அமைகின்றன. முதல் காண்டம் 116 பாடல்கள், இரண்டாவது காண்டம் 30 பாடல்கள், மூன்றாவது காண்டம் 35 பாடல்கள், நான்காவது காண்டம் 56 பாடல்கள், ஐந்தாவது காண்டம் 61 பாடல்கள், ஆறாவது காண்டம் 65 பாடல்கள் என நூல் அமைக்கப் பெற்றுள்ளது. சமணக் காப்பியமாக இந்நூல் விளங்குகின்றது. முதன் முதலில் டாக்டர் உ.வே.சா அவர்கள் 1935 ஆம் ஆண்டு இதனைக் குறிப்புரையுடன் பதிப்பித்தார். இதன் காலம் 15 ஆம் நூற்றாண்டு ஆகும்.

**உதயணன் பிறப்பு**

பரத காண்டம், தரும கண்டம் என்று கூறப்பட்ட பகுதிகளில் உள்ள நாடுகளில் வைத்து வானுற வளர்ந்துள்ள பொழில்கள் நிலைத்து நின்று, தம் மணத்தை நாற்றிசையினும் காற்றினாலே பரப்புதற்கிடனான நாடு வத்தவநாடு என்பதை அறியமுடிகின்றது. இவ்வத்தவநாட்டில் உள்ள கௌசாம்பி நகரத்திற்கு, செல்வச் சிறப்பினில் குபேரனை ஒத்தவனும், வள்ளல் தன்மையில் மாரி போல் விளங்குபவனுமாக சதானிகன் என்னும் அரசன் ஆட்சி செலுத்தி வந்தான், அவனுக்கு அருந்ததி போன்ற கற்பை உடையவளும், மயில் போன்ற சாயலை உடையவளுமான, சேதி நாட்டு, சேடக அரசனின் மகள் மிருகாபதி மனைவியாக வாய்க்கப் பெற்றனள். மிருகாபதி கருவுற்று ஒன்பது மாதங்கள் நிறைவுற்ற நிலையில் ஒருநாள் மேல் மாடத்தின் நிலாமுற்றத்தில் படுத்துக் கொண்டிருந்தபோது பேரண்டப்புள் என்னும் ஒரு பறவை. அவளை அழகிய ஊன்பிண்டம் என்று கருதி மெல்லெனக் கால்களாற் பற்றி எடுத்துக்கொண்டு வான்வழியே பறந்து சென்றது. முனிவர்கள் வாழும் விபுலம் என்னும் மலையின் கீழ்வைத்த போது அத்தேவி துயில் கலைந்துவிழித்தெழுந்தாள், ஊனைத்தின்பதன்றி உயிரைக் கொன்று தின்னாத நல்லியல்புடைய அப்பறவை அவ்விடத்தினின்று அகன்று சென்றது.

அந்நேரத்தில் மாணிக்கத்தை ஒத்த ஒரு ஆண் மகவு மிருகாபதியின் வயிற்றில் பிறந்தது. தன் தந்தையாகிய சேவகமன்னன் உலக வாழ்வினைத் துறந்து சிறந்த முனிவனாகி வாழ்கின்ற இடத்தில் தன் மகளைக் கண்டு மகிழ்ச்சியுற்று துறவோர்கள் வாழ்கின்ற தவப்பள்ளியில் அடைக்கலப்படுத்தினன். ஆங்குறையும் துறவோர்கள் 'இவன் ஞாயிறு தோன்றும் பொழுது பிறந்தமையால் இவன் பெயர்

'உதயணன்' என்று வழங்குவதாகக் கூறி பெயரிட்டு அழைத்தனர். அன்று முதல் அக்குழந்தை உதயணன் என்னும் பெயரோடு வளரத் தொடங்கியது.

## அரசுரிமை பெறுதல்

சேடக மன்னனின் மகன் விக்கிரமன் தனக்கு மகப்பேறில்லாமையால் தன் தந்தையின் தவப்பள்ளிக்கு வந்து ஆசிபெற்றுச் சென்றான். உலக வாழ்வைத் துறந்து தவ வாழ்வை அடையலாம் என்று எண்ணியபோது உதயணனைக் காண்கின்றான். தன் தங்கை மகன் என்பதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றான். தனது நாட்டினை மருமகனாகிய உதயணனுக்குக் கொடுத்துவிட்டு துறவு மேற்கொள்கின்றான். சதானிகன் மிருகாபதியைக்காணாது பல இடங்களில் தேடியபிறகு ஒரு துறவியைச் சந்திக்கின்றான். இவர்கள் சேதி நாட்டில் இருப்பதை அறிந்துகொள்கின்றான். ஒருநாள், மிருகாபதியின் வரவைக் கண்டு மகிழ்கின்றான். பிங்கலன், கடகன் என்னும் இரண்டு புதல்வர்களைப் பெற்றெடுக்கின்றான். சேதி நாட்டுடன், வத்தவ நாட்டின் அரசுரிமையும் உன்னதே ஆகுக என்று கூறி உதயணனிடம் நாட்டை ஒப்படைத்து விட்டு சதானிகன் துறவு மேற்கொள்கின்றான்.

## அமைச்சர்கள்:

யூகி, உருமண்ணுவா, வயந்தகன், இடபகன் என்னும் நான்கு அமைச்சர்கள் உதயணனுக்கு, நாட்டை ஆட்சி செலுத்தும் வகையில் துணையாக அமைந்தனர். பிரமசுந்தரமுனிவரின் மகனான யூகி, உதயணனின் நண்பனாக விளங்கினான். இம்முனிவரிடம் இருந்தே யானை முதலிய பிற விலங்குகளும் தன்னெதிர் கண்டு வந்து வணங்குவதற்குக் காரணமான தெய்வத் தன்மையுடைய, இசையையுடைய தேவவேந்திரனால் தனக்குக் கிடைக்கப் பெற்ற 'கோடவதி' என்னும் யாழை உதயணன் பரிசிலாகப் பெறுகின்றான்.

## தெய்வீகயானை மறைதலும் சிறையில் அகப்படுதலும்

உதயணன் யாழிசையில் வல்லவன், அவனது யாழின் இசைக்கு மயங்கி ஒரு தெய்வீக யானை அவனிடம் வந்தது. ஒரு நாள் இரவுப் பொழுதில் உதயணன் கனவில் அவ்யானை தோன்றி சில நிபந்தனைகளை விதித்தது. இதனை,

"பன்னிடும் பாகன்வந்து
பற்றியே யேறினாலும்
இன்றைநாண் முதலாநீநா

னின்றியே முன்னுண்டாலும்
அன்றுன்பானில்லே னென்றே
யக்கரி யுரைப்பக் கேட்டான்"

(பாடல்: 20)

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. உதயணன் யானைக்கு உணவு தரும் முன்பாக தான் உண்ணக்கூடாது என்பதை மறந்துவிட்டு உணவு உண்டதும் மாயவித்தைபோல அந்த யானை மறைந்துவிட்டது. வருத்தம் அடைந்த உதயணன் காடுமேடுகளில் எல்லாம் யானையைத் தேடி அலைந்தான். இந்நிலையில் அவந்திநாடு - உஞ்சைமாநகரின் அரசன் பிரச்சோதனன், தனக்குக்கப்பம் செலுத்தாத அரசர்களைச் சிறைபிடிக்க எண்ணினான். அச்சமயம் உதயணன் கப்பம் செலுத்த வில்லை என்பதை அறிந்து சிறைப்படுத்த முற்படுகின்றான். கல்வி, வீரம், களிற்றினை அடக்கும் ஆற்றல், கோடவதியென்னும் யாழினால் சிறப்பாக வாய்ந்த வித்தை போன்றவற்றால் உதயணனைச் சிறைப் படுத்த இயலவில்லை என அமைச்சர்கள் அம்மன்னனிடம் கூறினர். 'இன்னே சென்று அச்சிறுவனைச் சிறைப்படுத்தி எம்பாற் கொணர் வீராக' என்று கட்டளை இட, அமைச்சர்கள் ஒரு சூழ்ச்சி செய்கின்றனர். ஒற்றர்கள் மூலமாக தெய்வீக யானை மறைந்து போனமையால் உதயணன் வருந்தி இருப்பதையும், உதணயனின் அமைச்சனாகிய யூகி தன் பகைவர் மேல் போர் மேற்கொண்டு சென்ற செய்தியும் அறிந்து தக்க சமயம் அறிந்து கொண்டு மாய யானை ஒன்றைச் செய்து அதனைக் காட்டில் உலவவிட்டு உதயணனின் தெய்வீக யானை போல் அவனை நம்ப வைக்கின்றனர். இச்செய்தியினை,

**"அரக்கினும் மெழுகாக்கிய நூலினும்
மரததினுங் கிழி மாவின் மயிரினும்
விரித்த தோலினும் வேண்டிய வற்றினும்
தரித்த யானையைத் தாமியற்றினார்"**

(பாடல்: 39)

என்ற பாடல் பதிவிடுகின்றது. அவ் யானையின் வயிற்றில் வீரர்கள் 96 பேரும், மற்றொரு பக்க அறையில் போர்க்கருவிகளையும் வைத்துக் கொண்டு சாலங்காயன் என்னும் அமைச்சன் அதனைச் செலுத்தினான். வேடர்கள் அது தெய்வீக யானை என்று கூறியதை நம்பி அவ்விடத்திற்கு உதயணன் வருகின்றான். சரியான நேரம் பார்த்துக் காத்திருந்த மறவர்கள் பொய்யானை உருவத்தை அழித்திட, உடனே அச்சமயம் போர் சூழ்ந்தது. யானைப்படை, குதிரைப்படை எனப்பலபடைகள் அழித்தான் உதயணன். அரசர்கள் 'அமைச்சர்களைக் கொல்வதிலர்' என்று அறிவுடையோர் நன்மொழியை நினைந்து சாலங்காயனின் தலையில் வாளை வைத்து அழுத்தாமல் விட்டு விட்டான். இச்சூழ்நிலையில் யானையின் கொம்பில் பட்டு உதயணனின் வாள்,

ஓடிய வெறுங்கையுடன் நின்ற உதயணனைப் பகை மறவர்கள் சுற்றிக் கொண்டனர். இருப்பினும் இச்செய்தியைக் குறிப்புமொழிகளால் தன் நண்பனுக்குப் புரியும்படி திருமந்திரவோலை வரைந்து தன் அமைச்சரான வயந்தகனிடம் கையிலே கொடுத்துவிட்டுச் செல்கின்றான். தொல்காப்பியர் இம்மொழியை

"எழுத்தொடும் சொல்லொடும் புணராதாகிப்
பொருள் புறத்ததுவே குறிப்பு மொழி என்ப" (தொல். 1435)

என்று குறிப்பிடுகின்றார். ஆங்கிலத்தில் நாம் இதனை hint - word என்று குறிப்பிடுகின்றோம். இதனை உதயணன் பயன்படுத்துகின்றான்.

**நளகிரியை அடக்குதல்**

உதயணன் சிறையில் இருப்பதை அறிந்த யூகி துன்பமுற்றான். தான் இறந்துவிட்டதாக ஒரு சூழ்ச்சி செய்துவிட்டு உஞ்சை நகரை அடைந்தான். தனது தோற்றத்தை மாற்றிக்கொண்டு அங்குள்ள படை வீரர்களே பார்த்து வியக்குமாறு உருக்கொண்டான். புல்லாங்குழலின் இசையை எழுப்பி சிறைப்படுத்தப்பட்ட உதயணனுக்குத் தனது வருகையை உணர்த்தினான். அரசனுடைய பட்டத்து யானையான நளகிரிக்கு அகிற் புகையும், மருந்துப் புகையும் ஊட்டி, உதயணனை விடுவிக்க, யானையின் காதில் மந்திரமோதினான். சங்கிலியில் கட்டுண்ட யானை அதனை அறுத்துக் கொண்டு உஞ்சை நகரத்தையே அழிக்க முற்பட்டது. அனைவரும் செய்வது அறியாது திகைத்தனர். உதயணனால் மட்டுமே இது சாத்தியம் என்று பிரச்சோதனனுக்கு அமைச்சர்கள் அறிவுறுத்தினர். உதயணனுக்கு கைம்மாறாக, அவனை சிறையில் இருந்து விடுவிக்கலாம் என்றனர். உதயணன், யாழ் இசைத்து அக்களிற்றினை அடக்கினான். பிரச்சோதனன் மகிழ்ந்து பரிசுப் பொருட்கள் பலவற்றை நல்கினான். தன் மைந்தர்களுக்கு படைக்கல வித்தைகளையும், தன்மகள் வாசவதத்தைக்கு யாழ் வித்தையும் கற்றுத்தருமாறு கூறினான். நட்புறவு பூண்டான்.

**யூகியின் செயல்**

பிரச்சோதனன், தந்திரமாக உதயணனைச் சிறைபிடித்தது போல யூகியும், குறப்பெண் வேடம் கொண்டு குறிசொல்வது போல வந்து இந்நகருக்கு இனி தீங்கு வர வேண்டாம் எனில் அனைவரும் பொய்கையில் நீராடவேண்டும் என்று கூறிச் செல்கின்றான். மன்னனோடு திரள்திரளாக நீராட அனைவரும் சென்றபோது உதயணன் வாசவதத்தையைக் கைப்பற்றிக் கொண்டு சென்று விடுகின்றான். இருவருக்கும் வேள்வி முறைப்படி திருமணம் நடைபெறுகின்றது. காதல் மயக்கத்தில் அரசன் என்ற முறையில் ஆற்ற வேண்டிய கடமைகளை உதயணன் மறக்க, நாட்டைப் பகைவர்கள்

ழ்கின்றனர். உதயணன் நற்தளிர் கொண்டுவர காட்டிற்குச் சென்ற நரத்தில், வாசவதத்தை இருக்கின்ற உவளக மாளிகையைத் த்கொளித்து விட்டு, சாங்கியத்தாயுடன் வாசவத்தையையும் அழைத்துக் காண்டு தன் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்ததோடு உதயணனிடம் ாசவதத்தை இறந்துவிட்டாள் என்றும் கூறுகின்றான். வாசவதத்தை டம், தாயே நீங்கள் நாட்டைக் காப்பாற்ற சிறிது காலம் மன்னனைப் ரிந்திருக்க வேண்டும் என்றும் கூறுகின்றான் அன்பைப் புறந்தள்ளி அறிவைக் கூர்மையாக்கவேண்டும் என எடுத்துரைக்கின்றான். அதனை வாசவதத்தையும் ஏற்கின்றாள். மேலும்,

**"பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்**
**விண்டு உமி போனால் முளையாதாம் - கொண்டபேர்**
**ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி**
**ஏற்ற கருமம் செயல்"** **(மூதுரை: 11)**

என்ற பாடலும் இதனை அறிவுறுத்துகின்றது. உரியதுணை இருந்தால் எடுத்த காரியம் வெற்றி பெறும். அவ்வகையில், யூகி உதயணன் தவறு செய்யும் பொழுது உற்ற துணையாய் இருந்து நட்பிற்கு இலக்கணமாக வாழ்கின்றான். யாப்பி என்பவளையும், திலதசேனை என்பவளையும் பிரச்சோதனன் திருமணம் செய்து கொள்கின்றான்.

**வாசவதத்தையை நினைத்துப் புலம்புதல்**

உதயணன் தன் மனைவி இறந்த செய்தி அறிந்து தானும் அத்தீயில் வீழ்ந்து இறந்தொழிவேன் என்று கூறி தீயில் பாய முற்பட்டான். உருமண்ணவா போன்ற அமைச்சர்கள் உதயணனை விடாது பற்றிக்கொண்டனர். வெந்து கரிந்த வாசவதத்தையின் உடம்பை எனக்குக் காட்டுக என்று கூறுகின்றான். கரிந்த பிணத்தைக் 'காவல் மன்னர் கண்ணாற் காண்பது அறத்திற்கு அழிவு' என்று அமைச்சர்கள் கூறுகின்றனர். தன்னுடைய மனைவி அணிந்திருந்த அணிகலன் களையேனும் எனக்குக் காட்டுக என்று உதயணன் கூறுகின்றான். வாசவதத்தை கைவிட்டுப்போன பொன்னணிகலன்களை அரசன் முன்பு அமைச்சர்கள் வைக்க,

**"மண்விளக்கமாகி நீ வரத்தினெய்தி வந்தனை**
**பெண் விளக்கமாகி நீ பெறற்கரியையென்று தன்**
**கண் விளக்கு காரிகையைக் காதலித் திரங்குவான்"**
**புண் விளக்கிலங்கு வேற்பொற்புடைய மன்னவன்"**

**(பாடல்: 142)**

என்று அழுது புலம்பினான். அமைச்சர்கள் ஆறுதல் கூறியதோடு மகத நாட்டிலே இறந்த மாந்தரை மீண்டும் உயிருடன் வரவழைத்துக் காட்டும் ஒரு துறவி இருப்பதை எடுத்துரைக்க உதயணன் மகதநாடு

சென்றான். வயந்தகன் அறமுணர்ந்த காகதுண்டகன் என்ற முனிவரிட தம்முடைய சூழ்ச்சியைத் தெரிவிக்கின்றான். அம்முனிவனும் நீ இரண் திங்கள் இங்கு இருக்கவேண்டும். அங்ஙனம் நீ இருப்பின் இற மனைவியையும், நாட்டையும் என் வித்தையால் நினக்கு மீட்டு தருவேன் என்று அம் முனிவன் கூறுகின்றான். உதயணனும் ம நாட்டில் தங்குகின்றான்.

**உதயணனின் பல்வேறு திருமணங்கள்**

மகதநாட்டில் உள்ள இராசகிரியம் என்னும் மாநகரத்திற் தருசகன் என்னும் பெயரை உடையவன் அரசனாக விளங்கினா அவ்வரசனின் தங்கை பதுமாபதியை உதயணன் திருமணம் செய் கொள்கின்றான். தருசகனின் தந்தை அரண்மனைக்குள் மறைத் வைத்துச் சென்ற பொருள்களைக் கண்டெடுப்பவர்கள் இருக்கின்றார்க என ஆராய்ந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், தனது வித்தையா தோல்வியுறச் செய்து வெற்றி பெறுகின்றான். பதுமாபதிக்கு சீதனமா பல பொருள்களைப் பெறுகின்றான். அவ்வகையில் ஐயாயிர யானைகள், இரண்டாயிரம் குதிரைகள், ஆயிரத்திருநூறு தேர்கள் அறுபத்தெண்ணாயிரம் காலாண் மறவர்கள், நறிய மலர் மாலை அணிந்த எண்ணூற்று என்பது மகளிரோடு, வருடகாரி என்னு படைத்தலைவனையும், கூரிய வேலையுடைய சத்தியென்பவனையும் உயரிய மறப்பண்புடைய தருமதத்தனையும் உதயணன் பின் செல்வீராக என்று கூறியதோடு சீதனங்கள் பலவற்றை அளிக்கின்றான் இதிலிருந்து அன்று முதல் இன்று வரை ஒவ்வொரு வரும் தமது தகுதிநிலையை அடிப்படையாக வைத்து சீதனத்தைப் பல பெயர்களில் வழங்கி வருகின்றனர். அன்பின் அடையாளமாக கௌரவத்தின் சின்னமாக சீதனம் கையாளப்பட்டு வருகின்றது என்பதை அறிய முடிகின்றது. பின்பு தன் பகைவனான ஆருணி மன்னனைக் கொன்று வீழ்த்தி தன்னுடைய கோசம்பி நகரை வந்து அடைந்தான். அங்கு யூகியும், வாசவதத்தையும் மீண்டும் வருவதைக் கண்டு மகிழ்கின்றான். பதுமாபதியைக் கண்டு வாசவதத்தையின் ஊடலைத் தணிக்கின்றான்.

> “பாடக மிரங்கும் பாதப் பதுமையினோடு மன்னன்
> கூடிய கூட்டந் தன் போற்குணந்தனை நாடியென்ன
> ஊடியதேவி தன்னை யுணர்வினு மொளியினாலும்
> நாடினின்றனக் கன்னாடானந்திணை யல்லளென்றான்” (பாடல் 202)

என்று புகழ்கின்றான். அதன் பின்னர் மானனீகை என்பவளையும், விரிசிகை என்பவளையும் மணந்து கொண்டு வாழ்ந்தான். கோசல நாட்டு மன்னன் மகளான மானனீகை பந்தடிப்பதில் வல்லவள்.

பந்தடிக்கும் போட்டியில் எண்ணாயிரம் கையடித்து வெற்றி பெற்றவள். இவளின் பந்தாட்டத்தைக் கண்ட மக்கள்,

"விரிவு றிந்நிலத்திடை
வேறு கண்ட தில்லென்பார்"

(பாடல்: 233)

ஆகையால், உதயணனின் மனம் அவளை நாடியது. விரிசிகையின் திருமணத்தை,

"காவின் முன் மாலைசூட்டிக்
காரிகை கலந்து விட்ட
பூவின் மஞ்சரியைப் போலும்
பொற்பு நல் விரிசிகையைத்
தாவில் சீர் வேள்வி தன்னாற்
றரணீசன் மணந்தானன்றே"

(பாடல்: 240)

என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது.

## நரவாகனன் பிறப்பு

உதயணன் மனைவி வாசவதத்தை கருவுறுகின்றாள். அவள் வானில் பறந்து செல்ல வேண்டும் என ஆசைப்படுகின்றாள். உதயணன் ஒரு தேவனின் துணைகொண்டு வானில் பறக்கும் தேரை உருவாக்கு கின்றான். பொதிகைமலைக் காட்சியைக் கண்டு மகிழ்கின்றாள். பின்பு ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுக்கின்றாள்.

"நரவாகனன்னே யென்று
நரபதி நாமஞ் செய்தான்"

(பாடல்: 253)

என்பதன் வழி தன் மகவிற்கு நரவாகனன் என்று பெயரிட்டனன் என்பதையும், சச்சந்தனனின் மனைவி விசயை மயிற்பீலியில் சென்றது போல வாசவதத்தையும் சென்றுள்ளாள் என்பதையும் அறிய முடிகின்றது. மதன மஞ்சிகை, வேகவதி, அநங்க விலாசனை என மூவரை நரவாகனன் திருமணம் செய்துகொள்கின்றான். வித்தாதர உலகத்தில் ஆட்சியை நடத்துகின்றான். இந்திரன் நரவாகனனை உவந்து சக்கரநிதி முதலிய ஒன்பது வகை நிதிகளையும் வழங்கினான். பதுமாபதியின் மைந்தனாகிய கோமுகன் வத்தவ நாட்டிற்கு இளவரசன் ஆகின்றான்.

## துறவு மேற்கொள்ளல்

"படுமழை மொக்குளின் பல்காலும் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென்றெண்ணித் தடுமாற்றம்
தீர்ப்பேம்யாம் என்றுணரும் திண்ணறி வாளரை
நேர்ப்பார் யார் நீணிலத்தின் மேல்"

(நாலடியார்: 27)

என்பதற்கேற்ப நன் ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் இவற்றைப் பேண துறவு வாழ்க்கையை உதயணன் மேற்கொள்கின்றான். அரசனுடைய தேவிமாரும், ஒப்பற்ற அமைச்சர்களும் தருமவீரர் என்னும் முனிவர் உறையும் பொழிலை அடைந்து அவரது திருவடி களை வணங்கி முடிவில்லாத பேரின்ப வாழ்வை உதயணன் அடைந்தனன். தேவிமாரும், அமைச்சர்களும் நோன்பு செய்து தேவலோகத்தில் பிறப்பெய்தி, தத்தம் தகுதிக்கியன்ற இன்ப வாழ்வைப் பெற்றனர் எனலாம்.

இவ்வுலகில் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை எனப் பல ஆசைகள் இருப்பினும் ஒவ்வொருவரின் மனதிலும் சில ஆசைகள் ஏற்படுவதுண்டு. மனதில் தோன்றும் எண்ணமே ஆசைக்கு அடிப்படை யாகின்றது. எல்லோரும் ஆசையின்றி வாழ வேண்டும் என ஆசைப்பட்டுக் கொண்டவர் புத்தர். அவ்வகையில் உதயணனின் வாழ்வில் காதல், ஊடல், கூடல் எனப் பலவும் நிகழ்கின்றது. ஒருவன் பல கலைகளைக் கற்றுணர்ந்து செல்வச் செழிப்பில் மூழ்கினாலும், இறுதிக்காலத்தில் தன்னோடு நிலைத்து நிற்பது எதுவுமில்லை என்பதை உணர்த்தும் கதாப்பாத்திரமாக உதயணனின் படைப்பு அமைகின்றது என்பதை விளக்கும் வகையில் இக்காவியம் இடம் பெறுகின்றது.